செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 87 நாள் : 13-2-17

# இந்து சமய அறநிலையத் துறை

## வேலூர், இணை ஆணையர் மண்டலம்

**திறன் மேம்பாட்டு பயிற்சி – 2016–2017–ம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பு –அறிவிப்பு எண்.1, ஓதுவார், அர்ச்சகர் மற்றும் பட்டாச்சாரியார்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்**

--------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.09.2016 அன்று சட்டப்பேரவையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பு எண்.1–ல் திருக்கோயில்களுக்கும், பக்தர்களுக்கும் சேவை வழங்குவோரில் அர்ச்சகர், பட்டாச்சாரியார் மற்றும் ஓதுவார் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே, வேலூர் இணைஆணையர் மண்டலத்தில் (வேலூர், காஞ்சிபுரம் திருவள்ளூர் ஆகிய மாவட்டத்தில்) தற்போது பணியில் உள்ள 150 நபர்களுக்கு ஓதுவார், அர்ச்சகர் மற்றும் பட்டாச்சாரியார்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியினை தேர்ந்த பயிற்றுநர்களை கொண்டு இன்று 13.02.2017 முதல் 10.03.2017 வரை நான்கு வார காலத்திற்கு வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தோட்டப்பாளையம், ஸ்ரீநாராயணரெட்டிச்சத்திரத்தில் இத்திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

| ஓதுவார் கால அட்டவணை | |
|---|---|
| முதல் வாரம் | திருஞானசம்பந்தர் அருளிய அற்புத பதிகம் விளக்கம் |
| இரண்டாம் வாரம் | திருஞானசம்பந்தர் அருளிய பண்கள் வேறுபாடுகள் குறித்த பாடமுறை |
| மூன்றாம் வாரம் | திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பாடல்கள், அற்புதங்கள் |
| நான்காம் வாரம் | 11–ஆம் திருமுறை ஆசிரியர்கள் அருளிய பாடல்கள், பயிற்சி மற்றும் திருப்புகழ், பிள்ளைத்தமிழ், கொடிக்கவி குறித்து சை சித்தாந்த விளக்கம் |

| அர்ச்சகர் கால அட்டவணை | |
|---|---|
| முதல் வாரம் | மையப் பொருள், தர்ஷணாதி விதி, நிலத் தேர்வு முதல் பிரதிஷ்டைவரை |
| இரண்டாம் வாரம் | கணபதி உபநிஷத் விளக்கம், புண்யாஹவாசனம் மந்திர விளக்கம், பூஸூக்தம், மேதினீஸூக்தம் ஒஷதி ஸூக்தம் |
| மூன்றாம் வாரம் | 1 – 3 திருமுறைகள் முக்கியமான பதிகங்களில் இருந்து பாடல்கள்<br>சிவஜ்ஞான போதம் 12 சூத்திரங்கள், ரௌரவ ஆகமத்தில் இருந்து |
| நான்காம் வாரம் | பஞ்சாங்க தேவதைகளின் பெயர் விளக்கம்<br>வினாயகர் திரிசதி சுப்பிரமண்ய திரிசதி |

| பட்டாச்சாரியார் கால அட்டவணை | |
|---|---|
| முதல் வாரம் | மந்திர புஷ்பம் மங்கள சுலோகங்கள் |
| இரண்டாம் வாரம் | மிகவும் அவசியமான பாசுரங்கள், புண்யாஹவாசனம் சேவார்த்திகளை அணுகும் முறையை மேம்படுத்துதல், ஆசீர்வாத பஞ்சாதிகள் |
| மூன்றாம் வாரம் | ஆசீர்வாத பஞ்சாதிகள் புண்யாஹவாசனம் |
| நான்காம் வாரம் | திருவாராதனத்தின் நுணுக்கங்கள் அர்ச்சனையின் ஸூட்சமங்கள் |

மேலும் இப்பயிற்சியில் பங்குபெறுபவர்களுக்கு ஊக்கத்தொகையாக நான்கு வாரத்திற்கு நபர் ஒருவருக்கு ரூ.2000/– வழக்கப்படவுள்ளது பயிற்றுநர்கள் சன்மானம் நாள்–1க்கு நபர்–1க்கு ரூ.500/– வழக்கப்படும் இப்பயிற்சியின் கடைசி நாளில் பயிற்சி பெற்றவர்களுக்கு திறனாய்வு தேர்வு நடத்தி இலாகா மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்

முன்னிலை : திரு. க. வெ. அசோக்குமார்
இணை ஆணையர், வேலூர்

குத்துவிளக்கேற்றி
துவக்கி வைத்து
சிறப்புரை : திரு. ராமன்,
மாவட்ட ஆட்சியர்
வேலூர்.

நன்றி உரை : ப. சுப்பிரமணியம்,
உதவி ஆணையர்
வேலூர்

செ.ம.தொ.அ.
வேலூர்–9. 13/2/2017

க. ரமணி, உதவி ஆணையர்
காஞ்சிபுரம்